முதல்வர் ஈ. கே. நாயனார் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தி இங்கே இருந்து கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு சரியான முறையில் ரிக்கார்டு பூர்வமாக கொண்டு செல்லப்படுகின்ற கச்சா முந்திரி அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்லும்போது கேரள போலீஸ் தடுக்கக் கூடாது. ஏனென்று சொன்னால் அந்த பார்டர் பிரிந்து அந்த அளவுக்கு இருக்கிறது. சில பகுதி களில் வரும்போது கேரள சாலைக்கு வந்துதான் பிறகு நம்முடைய தமிழ்நாட்டு எல்லைக்கு வர வேண்டி இருக்கிறது. ஆகையினால் அந்தப் பகுதியிலே வரும்போது ரிக்கார்டு பூர்வ மாக கொள்முதல் செய்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கொள்முதல் செய்த கச்சா முந்திரியை அந்த 9 தொழிற்சாலை களுக்குக் கொண்டு போவதற்கு தடை செய்யக் கூடாது என்று சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர் கள் இங்கே எடுத்துக் கூறிய விவரங்களை முறையாக எனக்கு விவரமாக எழுதித் தருவார்களேயானால் அது குறித்து ஏற்ற நடவடிக்கைகளை அரசின் சார்பாக எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) விருதுநகர் நகராட்சியில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப் படும் திட்டங்கள்.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, நகர்ப்புற வளர்ச்சிக்காகவும், போக்குவரத்து மேம் படவும் மத்திய அரசின் மூலமாக உலக வங்கியிலிருந்து சுமார் 640 கோடி ரூபாய்க்கு நம்முடைய தமிழக அரசு நிதி உதவி பெற்று வருகின்றது. இந்த நிதி உதவி போக்கு வரத்து வளர்ச்சிக்காகவும், பல்லவன் போக்குவரத்து கழகத் துக்கும் பெறப்பட்டு அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைபெற்று வருகிற சூழ்நிலையிலும் கூட—நகராட்சிகளுக் காக வழங்கப்பட்ட நிதி—கடந்த ஜனவரி மாதமே அந்த வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நிலை இருந்தபோதிலும் கூட இன்னமும் அந்த வேலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. இதற்கு முக்கியமான காரணம் அதற்கு கிர்லோஸ்கார் கன்சல்டன்ட் என்று ஒருவரை நியமித்து இருக்கிறார்கள். அவர்கள் பார்க்கக்கூடிய வேலை கொஞ்சமும் சரி இல்லை. அதனுடைய கூட்டத்தை நானே நான்கு

அல்லது ஐந்து தடவை அட்டன்ட் செய்து இருக்கிறேன். அவர்கள் பேசிக் கொண்டேதான் இருக்கிறார்களேயொழிய, வேலையைப் பார்ப்பதாகக் காணோம். இன்னொரு காரணம் என்னவாக இருக்கும் என்றால் ஹவுசிங் மற்றும் அர்பன் டெவலப்மென்ட் ஒரு அமைச்சகத்தில் இருக்கிறது. அர்பன் டெவலப்மென்ட் ஒரு அமைச்சகத்தில் இருக்கிறது. ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரையில் லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் மினிஸ்டரிடம் வாட்டர் சப்ளை தனியாகவும், லோகல் அட்மினிஸ்ட்டிரேஷன் தனியாகவும் இருக்கின்றது. நகராட்சிப் பணிகளைப் பொறுத்தவரையிலும் வாட்டர் சப்ளையும், ஹெல்த்தும் முக்கியமான பணிகள். ஆனால் இந்த இரண்டுமே அந்த நகராட்சி அதிகாரிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அமைச்சர்களிடம் இல்லை. அதனாலே ஒரே செயலாளர் இரண்டு அமைச்சகத்துக்குப் பதில் சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றார். One cannot serve two masters என்பது அட்மினிஸ்ட்ரேஷனில் பேசிக் திட்டம். ஒரு அமைச்சரின் கீழ் இரண்டு செயலாளர்கள் இருக்கலாமேயொழிய ஒரு செயலாளரை இரண்டு அமைச்சகங்களைப் பார்க்கச் சொல்வது எப்படி என்பது தெரியவில்லை. இருந்த போதிலும் உலக வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதி உரிய நேரத்தில் உரிய முறையில் செலவழிக்கப்படாவிட்டால் மற்ற மாநிலங்களுக்கு அந்த நிதி மாற்றப்பட்டுவிடும் என்ற அபாயம் இருக்கின்றது. அதனால்தான் மத்திய அரசு பஞ்சாயத்து ராஜ் மூலமாக மாநில அரசுகளை விட நேரடியாக அந்த உள்ளாட்சித் துறைக்கு நிதி உதவி வழங்க வேண்டுமென்ற கருத்தையும் இதை நியாயப்படுத்துவதாக அமைந்துவிடும் என்பதால் இதை விரைவாக இந்தப் பணியை ஆரம்பித்து, விருதுநகர் நகராட்சியில் அந்த வேலையை ஆரம்பிப்பதற்காக எங்களுடைய அருமைத் தலைவர் மாண்புமிகு மதிப்பிற்குரிய மூப்பனார் அவர்களோடு இணைந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் விருதுநகருக்கு வருகை தந்து அந்தப் பணிகளுக்கு எல்லாம் அடிக்கல் நாட்டி எங்களை எல்லாம் கௌரவிக்க வேண்டுமென்று விருதுநகர் நகர்மன்றத் தலைவர் என்ற முறையிலே நகராட்சி சார்பாக உங்களுக்கு நான் வேண்டுகோள் விடுத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சட்டமன்றத்தில் தானே பேசுகிறீர்கள் விருதுநகர் நகராட்சி மன்றத்தில் இல்லையே.

திரு. ரா. சொக்கர் : தலைவரவர்களே, அந்தத் தொகுதிக்காகத் தான் பேசுகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெருநகர் வளர்ச்சித் திட்டம் உலக வங்கி உதவியுடன் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்ற நகரங்கள் அதில் எடுக்கப்பட்டு உலக வங்கி உதவியுடன் அந்தத் திட்டம் நடைபெற இருக்கின்றது. விருதுநகரைப் பொறுத்த வரையில் முதலில் தேர்வு செய்யப்பட்ட 74 நகரங்களில் விருதுநகரும் அடங்கும்.

இது மதுரை மண்டலத்திலுள்ள பிரிவில் அடங்கியிருப்பதால், மதுரை மண்டலத்திலுள்ள அந்தப் பணிகளை முறைப்படுத்த கிர்லோஸ்கர் கம்பெனி என்ற ஒரு நிறுவனம் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது. அந்தக் கம்பெனி மூலமாக அந்த உள்ளாட்சி மன்றங்கள்—ரீபேயிங் கெப்பாசிட்டி—அவர்கள் பணம் திருப்பக்கூடிய நிலைமை இருக்கின்றதா என்பதையும் ஆய்வு செய்து, அந்தப் பணிகளை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்ற குறிப்பும் ஆய்வில் உள்ளது.

நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்தப் பணியை மீண்டும் துரிதப்படுத்த அந்த கிர்லோஸ்கர் கம்பெனிக்கு நாங்கள் தாக்கீது அனுப்பியுள்ளோம். இந்தத் திட்டத்தை உள்ளாட்சி மன்றத் துறையின் மூலமாகவும் இணைந்து விரைவில் முடிக்க இந்த அரசு ஆவன செய்யும்.

(உ) எதிர்க் கட்சித் தலைவர் மீது வழக்குப் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள்மீது காவல்துறையால் ஒரு வழக்கு தவறான முறையிலே போடப்பட்ட பொழுது, அதை நாங்கள் சுட்டிக் காட்டியபோது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அது அவர்களுடைய தகவலுக்கே தெரியாது, அப்படி அவர் மீது வழக்கு இருந்தால் அந்த வழக்கு திரும்பப் பெறப்படுகிறது, வாபஸ் செய்யப்படுகிறது என்று இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அதற்குப் பின்னால் அதையொட்டி போலீஸ் கமிஷனர் **அவர்கள் சில நாட்களுக்குப் பின்னால் பேட்டி கொடுத்த பொழுது, எனக்கு எழுத்துப்பூர்வமாக, அதிகாரப்பூர்வமாக அதுபோல உத்தரவு ஏதும் இல்லை, எனவே வழக்கு இருக்கிறது என்பதைப்போல கமிஷனர் ** எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அந்தப் பிரச்சினையை நான் மீண்டும் சட்ட

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.